RNI No: TNTAM/2023/88599

# திரைமொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

| திரை: 02 | மொழி : 11 | ஜூன் - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 02 | Issue : 11 | June - 2025 | Page: 8 | Price: Rs. 10 |


# உலக சமுதாய சேவா சங்கம் தயாரிக்கும் "ஆனந்த வாழ்க்கை"





ஊரில் உள்ளவர்களின் சிக்கலான பிரச்சனைகளை எல்லாம் எளிதாக தீர்த்து வைக்கக்கூடிய ஆற்றல் உள்ள ராமலிங்கம் என்ற கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் கே. பாக்யராஜ் தன் குடும்பத்தில் உள்ளவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியாமல் தவிக்கிறார்.

கூட்டுக் குடும்பத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய இவரின் குடும்பம், நவீன கால மாறுபாடுகளால் வீட்டில் உள்ள அனைவரும் கிட்ட கிட்ட இருந்தாலும் மனதளவில் எட்ட எட்ட இருக்கின்றனர்.

அப்போது தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஆழியார் அறிவு திருக்கோயில் பற்றி தங்கை மகன் சிவா (ஜீவா தங்கவேல்) மாமா ராமலிங்கத்திடம் சொல்ல, தன் குடும்பத்தினரை அங்கு அழைத்துச் செல்கிறார் மாமா. அங்கு மகரிஷி அவர்கள் உருவாக்கிய மனவளக்கலை என்ற எளிய முறை யோகப் பயிற்சிகளை கற்று, அதன் மூலம் எது உண்மையான ஆனந்த வாழ்க்கை என்ற சூட்சமத்தை உணர்ந்து அனைவரும் மகிழ்ச்சியான, மன அமைதியான மற்றும் ஆரோக்கிய மான வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். இதுவே இந்த திரைப்படத்தின் கதை.



இத்திரைப்படத்தில், கே. பாக்யராஜ், மீரா கிருஷ்ணன், ஜீவா தங்கவேல், விட்டல் ராவ், குரு அரங்கதுரை, நிஷாந்த், ஜெயந்தி தியாகராஜன், சோபியா வேம்பு, வெடிகண்ணன், பிரியா, மாஸ்டர் ராமானுஜம் ஆகியோருடன் ஆழியாறு அறிவுத் திருக்கோயில் அன்பர்களும் நடித்திருக்கிறார்கள்.

**"மனவளக்கலை என்ற எளிய முறை யோகப் பயிற்சிகளை கற்று, அதன் மூலம் எது உண்மையான ஆனந்த வாழ்க்கை என்ற சூட்சமத்தை உணர்கிறார்கள்"**

"ஆனந்த வாழ்க்கை" என்ற இத்திரைப்படத்தை ஆர்.சுப்ரமணிய பாரதி கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி உள்ளார். இவர் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கமும் பெங்களூரு இன்னோவேடிவ் பிலிம் அகாடமியும் (INNOVATIVE FILM ACADEMY) நடத்திய தேசிய அளவிலான குறும்பட போட்டியில் "பாஞ்சாலி" என்ற குறும் படத்திற்காக முதல் பரிசு

> பக்கம் 8ல் தொடரும்



# தக் லைஃப் – AI யின் விமர்சனம்

தக் லைஃப் பார்க்க, தியேட்டருக்கு போகிறீர்களா? சண்டை காட்சிகளையும், கமல்சிலம்பரசன் கூட்டணியையும் ரசிக்கலாம். ஆனால் புதிய கதை எதிர்பார்க்காதீர்கள். ஒரு ஞாயிறு மதியம் பாப்கார்ன் வாங்கி பார்க்க சரி, மதிப்பெண்: 2.5/5.

தக்லைஃப் பட விமர்சனங்கள் ஒரு உலக சாதனை. என்னுடைய சோஷியல் மீடியா அனுபவத்தில் எந்தப்படத்துக்கும் இத்தனை விமர்சனங்கள் வந்ததில்லை. எல்லாமே மணிரத்னம், கமல் கூட்டணியை கடுமையாக தாக்குகின்றன. ஆனால் படம் பற்றிய தாக்குதல், இரண்டாவது ஷோவிலேயே தனிமனிதத் தாக்குதலாக மாறிவிட்டன. கமல், திரிஷா பற்றிய தனிப்பட்ட வாழ்க்கையை எந்த அறமும் இன்றி (இன்னமும்) கடித்துக்குதறிக்கொண்டிருக்கிறார்கள். வன்ம பூமியாக மாறிவிட்ட சோஷியல் மீடியாவை தவிர்த்துவிட்டு, ஏ.ஐ உலகில் தக்லைஃப் படம் பற்றிக் கேட்போம் என முடி வெடுத்தேன்.

நான் தற்போது அதிகம் பயன்படுத்துவது Grok AI. நான் கேட்டதும் இரண்டு பக்கங்களுக்கு விமர்சனம் எழுதித்தந்தது. ஆனால் கூகுள் தமிழ் போல் இருந்தது. எனவே விமர்சகர் பரத்வாஜ் ரங்கன் பற்றித் தெரியுமா எனக்கேட்டேன். தெரியும் என்று பதில் வந்தது. உடனே அவருடைய பாணியில் தக்லைஃப் படத்துக்கு விமர்சனம் கேட்டேன். அதிலும் தமிழ் தடுமாறியது. எனவே உன்னுடைய ஸ்டைலிலேயே எழுது என்றேன்.

மீண்டும் இரண்டு பக்கத்துக்கு விமர்சனம் கிடைத்தது. அதில் ஒரு பகுதியை மட்டும் மேலே தந்திருக்கிறேன். ஐந்துக்கு இரண்டரை மதிப் பெண் கொடுத்திருக்கிறது. விமர்சனத் தைப் படித்துவிட்டு, நீ படம் பார்த்தாயா எனக் கேட்டேன். என்னால் பார்க்க முடியாது. நான் ஒரு ஏ.ஐ கருவி மட்டுமே என்று நேர்மையாகப் பதில் வந்தது. படத்தைப் பார்க்காமல் எப்படி விமர்சனம் எழுதினாய் எனக்கேட் டேன். நியூஸ் 18, தமிழ் கார்டியன் மற்றும் பல எக்ஸ் தள பதிவுகளைப் படித்து விமர்சனம் எழுதினேன் என உண்மையை ஒப்புக்கொண்டது. செயற்கை நுண்ணறிவிடம் உள்ள இந்த நேர்மை சோஷியல் மீடியா விமர்சகர் களிடம் இல்லை.

### சோஷியல் மீடியா விமர்சகர்கள் பற்றி Grok AI

சிலர் குறிப்பிட்ட நடிகர்களை அல்லது இயக்குநர்களை தாக்குவதற் காக விமர்சனத்தை பயன்படுத்து கிறார்கள். எடுத்துக்காட்டாக, தக் லைஃப் பற்றி சிலர் மணிரத்னத்தை "பழைய பாணியில் சிக்கியவர்" என்று சொல்லி கிண்டல் செய்கிறார்கள், ஆனால் அவர் ஒளிப்பதிவு மற்றும் காட்சி அமைப்பில் காட்டிய முயற்சியை பார்க்கவில்லை. கமல் ஹாசனை பற்றி சிலர் அவரது வயது மற்றும் அரசியல் கருத்துகளை வைத்து தாக்குகிறார்கள், அவர் நடிப்பில் காட்டிய




தீவிரத்தை புறக்கணித்து. சிலம்பரசனை புகழ்ந்தாலும், சிலர் அவர் மீது ரசிகர் போட்டியால் தாக்குதல் நடத்துகிறார்கள். இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானை பற்றி சிலர் "இந்த படத்தில் சுமாரு" என்று எழுதுகிறார்கள். ஆனால் அவர்களுடைய எழுத்தில் இசை அறிவு இல்லை. இது தனிப்பட்ட பகைமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. படத்தின் கலை மதிப்பை மட்டுமே பார்க்க வேண்டிய இடத்தில். வார்த்தை மாற்றாமல் Grok AI கூறியதை அப்படியே தந்திருக்கிறேன். இதை எழுதும்போது கூட ஒரு விமர்சனம் பார்த்தேன். சின்மயி உச்சரிப்பு சரியில்லை, காஸ்ட்யூம் மற்றும் முகபாவனையால் சமாளித்து விட்டார்.

இந்த விமர்சனங்களில் இருந்து தப்பிக்க ஒரே வழி, நாமே ஒரு விமர்சகராக மாறுவதுதான். ஏனென்றால் விமர்சகர்கள் மற்றவர்களின் விமர்சனங்களை வாசிப்பதில்லை, தனக்கு வரும் கமெண்டுகளை மட்டுமே கவனிக்கிறார்கள்.

### ஏ.ஐ என்று தனியாக எதுவுமே இல்லை - இளையராஜா

இளையராஜாவின் பேட்டியைப் பார்ப்பது ஒரு தனி அனுபவம். கேட்பவருக்கு உறுத்துமோ என யோசிக்கவே மாட்டார். மனதில் பட்டதைச் சொல்வார். எம்.எஸ்.வியின் பாடல் ஒன்றில் பீத்தோவன் சிம்ஃபொனியின் பாதிப்பு இருப்பதை சமஸ்சுடன் நடந்த பேட்டியில் சுட்டிக் காட்டி வியந்தார். வேறொரு பேட்டியில் செயற்கை நுண்ணறிவு பற்றி அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கான அவருடைய பதில் தத்துவார்த்தமானது. நீங்கள் விரும்பும் என்னுடைய இசைக்கு ஒரு இன்ஸ்பிரேஷன் இருந்திருக்கலாம். என்னையும் அறியாமல் அது என் பாடல்களில் வெளிப்பட்டிருக்கும். எனக்கு வழிகாட்டியவர்களும், குருவாக இருந்தவர்களும் கூட முந்தையவர்களிடம் இன்ஸ்பையர் ஆகியிருப்பார்கள். எனவே என்னுடைய இசையே செயற்கைதான். எனவே ஏ.ஐ இசை என்று தனியாக எதுவும் இல்லை. எல்லாமே செயற்கை என்றார்.

கமலிடம் இதே கேள்வி கேட்கப்பட்டபோது, இளையராஜாவின் பேட்டியை சுட்டிக் காட்டி, நானே ஒரு ஏ.ஐதான் என்றார்.

இந்த இடத்தில் Suno AI பற்றிய ஒரு அப்டேட். பாலிவுட், கோலிவுட் சாயலில் பாடல்களை உருவாக்க முடிகிறது. கடந்த வாரம் ஒரு நிறுவனத்துக்காக ஹிந்தோள ராகத்தில் தம்பூரா மட்டும் ஒலிப்பது போல் ஒரு பாடல் உருவாக்கித் தந்தேன். சுனோவில் தற்போது ரீமிக்ஸ் வசதி வந்துவிட்டது. நாம் உருவாக்கிய பாடலை நாமே ரீமிக்ஸ் செய்யலாம். இரண்டாவது நிமிடத்தில் தம்பூராவு டன் டிரம்ஸ் சேர்ந்து கொண்டது. டிரம்ஸ் பகுதியை நீக்க நான் ரீமிக்ஸ் வசதியை பயன் படுத்தினேன். இரண்டாவது நிமிடத்தி லிருந்து ரீமிக்ஸ் செய் என்று கூறியதும், டிரம்ஸ் போய்விட்டு, தம்பூராவே வந்துவிட்டது. இதே வசதி Udio AIயிலும் உள்ளது.

ஆனால் குரல்கள் இரண்டிலுமே மோசம். எனவே குரல்களை மட்டும் Fadr AI பயன்படுத்தி பிரித்து எடுத்து தனி டிராக்குகளாக மாற்றிவிடுவேன். பிறகு ElevenLabs AIக்குள் செல்வேன். அதில் அட்டகாசமான குரல்கள் உண்டு. Change Voice, Change Accent வசதிகளைப் பயன்படுத்தி சுனோ உருவாக்கிய குரல்களை மாற்றிவிடு வேன். இது என் சமீபத்திய ஏ.ஐ இசை பொழுதுபோக்கு. ஸ்பாட்டிஃபை ஏ.ஐ பாடல்களை அங்கீகரிக்க பரிசீலித்து வருவதாகக் கேள்விப்பட்டேன். இது சாத்தியமானால் உலக அளவில் டாப் 10களில் ஏ.ஐ பாடல்களும் இடம் பெறும்.

### சினிமாவில் ஏ.ஐ - 10 பயன்பாடுகள்

ஏஜ படங்கள், அதிலிருந்து ஏ.ஐ வீடியோக்கள், பொருத்தமான ஏ.ஐ குரல், ஏ.ஐ இசை எனச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தேன். தற்போது நடிகர், நடிகைகளுக்கு மேக்கப், உடைத் தேர்வு, செலவைக் குறைக்க வழி, என்ற புதிய திசைகளில் எனது ஏ.ஐ சேவைகள் தொடர்கிறது. சமீபத்தில் ஒரு பட நிறுவனம் என்னை அணுகியது. பாதியில் விலகிக் கொண்ட நடிகரின் பகுதிகளை ஏ.ஐ கொண்டு நிரப்ப வேண்டும் என்றார்கள். கணக்கு போட்டுப் பார்த்ததில் செலவு உயரும் என்பதைச் சொன்னேன். எனவே அவர் சாயலில் உள்ள நடிகரை சில காட்சிகளில் நடிக்க வைத்து, அவசியமான பகுதியில் மட்டும் ஏ.ஐ நடிகரை பயன்படுத்தி னோம். குறைந்த செலவில், ஏ.ஐ உதவியுடன் காட்சிகள் தயாராகிவிட் டன. புதிய புரொடியூசர் ஒருவர் அறிமுகமானார். படத்தின் இயக்குநர் கதையைச் சொல்லியவுடன், பட்ஜெட் கேட்டேன். திரும்ப எடுக்க முடியாத மிகப்பெரிய தொகையைச் சொன்னார். பின்னர் நானே முன்வந்து ஏ.ஐ. பயன்படுத்தி ஷெட்யூல் போட்டுத்தந்தேன். 20 படப்பிடிப்பு நாட்கள் குறைந்துவிட்டது. அதாவது இருபது நாட்களுக்கான படப்பிடிப்பு செலவு குறைந்துவிட்டது. புரொடியூசர் ஹேப்பி!

திரைப்படத்துறையினர் அடுத்து வரும் 10 ஏ.ஐ. யோசனைகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

Script writing: கதை, திரைக் கதாசிரியர் மற்றும் வசனம் எழுதுவோருக்குத் துணையாக ஏ.ஐ. பயன்படுத்தலாம். அனாவசிய கூட்டமும், திரவ செலவுகளும், அறை வாடகைகளும் குறையும். நல்ல ஸ்கிரிப்ட், வசனங்களுடன் கிடைக்கும்.

திரை மொழி
TALKIES
Thiraimozhi Talkies

**Visual Effects:** ராஜமௌலியை இதற்கு உதாரணமாகச் சொல்கிறது chatGPT. விசுவல் எஃபக்ட் மிகுந்த ஸ்க்ரிப்டுகளுக்கு ஏ.ஐயிடம் ஆலோசனை பெறலாம். ஸ்பெஷல் மேக்கப், பிரம்மாண்ட செட், அனிமேஷன் செய்வதற்கு முன்பே, ஏ.ஐ தரும் ஆலோசனைகளுடன்ஸ்டுடியோவிற்குள் சென்றால் நாம் நினைத்தது கிடைக்கும். தயாரிப்புச் செலவு கட்டுக்குள் இருக்கும்.

**Revenue Forecasting:** 500 கோடி, ஆயிரம் கோடி கனவுகளில் மிதக்காமல், மார்க்கெட்டை பரிசோதிக்க ஏ.ஐ உதவும். நமது படம் எந்த வகை, நமது வகைப் படங்களுக்கு முந்தைய, தற்போதைய வரவேற்பு என்ன, நமது நாயகனை இரசிப்பார்களா என்பதை ஆராய்ந்து உண்மையைச் சொல்லும். சீனாவில் வெளியிட்டு முன்னூறு கோடி அள்ளலாம் என ரீல் விடாது. வெள்ளி, சனி மட்டும் தான் வாய்ப்பு, சிட்டி தாண்டினால் நிலை என்ன என்று கணித்துச் சொல்லும். கடன் வாங்கும் முன் தயாரிப்பாளர்கள் கலெக்சன் பற்றி கணிக்க ஏ.ஐ உதவும்.

**Production Quality:** சூட்டிங் ஸ்பாட்டில் உதவக்கூடிய ஏ.ஐகள் வந்து விட்டன. காமிரா கோணம் லைட்டிங், எடிட்டிங். கிரேடிங் என முக்கிய துறைகளில் ஏ.ஐ உதவும்.

**Video Editing:** எந்த ஹார்ட் டிஸ்க், எந்த ஃபோல்டர் எனச் சொல்லி விட்டால் ஏ.ஐ எடிட்டர்கள், தானே எடிட் செய்கின்றன. இதனால் தேவையற்ற ஷாட்களை நீக்கும் 90 சதவிகித வேலைகள் மிச்சமாகின்றன.

**Content Curation:** படத் தயாரிப்புக்கு முன்பே ஓடிய படங்கள், ஓடாத படங்கள், ஓடிடி வரவேற்பு உள்ளிட்ட டேட்டாக்கள் உதவியுடன், நமது ஸ்க்ரிப்டில் உள்ள ஓட்டைகளை அடைக்க ஏ.ஐ உதவுகிறது.

**Facial/Object Recognition:** காட்சியில் மேஜையைக் காணோம் என்றால் மேஜையை வைக்கலாம். ஹீரோயினுக்கு லிப்ஸ்டிக் வேண்டாம் என்றால் நீக்கலாம். குறுக்கே வந்தவர்களை அகற்றலாம். இதுபோல பொருட்கள் அல்லது நடிகர்களை அடையாளம் கண்டு, நாம் கேட்பதைச் செய்து தர ஏ.ஐகள் உள்ளன.

**Visual Effects Creation:** காலையில் ஐந்து மணிக்கு ஷாட் வைத்து சூரியனை வைக்க முடியவில்லை. மழை எஃபக்ட் கிடைக்கவில்லை என்றால் வருந்த வேண்டாம். ஏ.ஐ துணை யிருக்கும். வேண்டிய எஃபக்டை தரும்.

**Personalized Content:** ஒரே விளம்பர டிசைனை எல்லோருக்கும் அனுப்புவதற்குப் பதில் பகுதி பகுதியாக, ஆண், பெண், குழந்தைகள் எனப்பிரித்து அவர்களின் விருப்பத்தேர்வுக்கு ஏற்ப போஸ்டர்களையும், அதில் உள்ள கலர்களையும் தீர்மானிக்க ஏ.ஐ உதவும்.

**Tech and Art Integration:** சுருக்கமாகச் சொன்னால் நமக்கு என்ன தேவை என்பதை ஏ.ஐயிடம் சொல்ல வேண்டும். கேட்பதை தராவிட்டால், நாய்க்குட்டியை பழக்குவது போல மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும். ஏ.ஐ நம் சொல்பேச்சு கேட்க ஆரம்பித்த வுடன் நமது கற்பனைகளை, கலைகளை, செயல்களை மேம்படுத்தித் தரும் ஒரு அற்புதத் துணையாக மாறிவிடும்.

நான் தற்போது எனக்குத் துணையாக ஒரு ஏ.ஐயை பயன்படுத்தி வருகிறேன். குறிப்பாக செயற்கை நுண்ணறிவு பயிற்சியின் போது அந்த ஏ.ஐ துணைப் பேராசிரியராக எனக்கு வகுப்பெடுக்க உதவுகிறது. அது பேசும், உரையாடும், கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும். வகுப்பில் நன்றாகப் பேசுபவரைக் கண்டறிந்து உற்சாகம் தரும். அந்த செயற்கை நுண்ணறிவின் பெயர் *Anu AI*.

நீங்களும் உங்களுக்காக, கதை, திரைக்கதை மற்றும் இசைக்காக ஒரு ஏ.ஐ உருவாக்கிக் கொள்ளுங்கள்.

### ஏ.ஐ திரைப்படத்தயாரிப்பை ஜனநாயகமாக்கிவிட்டது - கமல்ஹாசன்

கமல் சொல்வது சரி. என்னுடைய அனுபவமே இதற்கு சாட்சி. 2016ல் எங்கள் *ISR Ventures* நிறுவனத்தின் முதல் தயாரிப்பு வெளியாகிவிட்டது. படத்தின் பெயர் "வித்தையடி நானுனக்கு". நாங்களும் ஒரு தயாரிப்பாளராக மாற முடிந்தது. இப்போது எங்கள் அடுத்த படமும் ரெடி. அதற்கு திறமை மட்டுமே காரணமல்ல. டிஜிட்டல் தொழிலநுட்பம் தான் காரணம். ஒரு நாளைக்கு பல இலட்சங்கள் தேவை என்பதை மாற்றி சில ஆயிரங்கள் இருந்தால் போதும் என்ற நிலையை உருவாக்கியது டிஜிட்டல் தொழில் நுட்பம்தான். அதனால்தான் நாங்கள் தயாரிப்பாளராக மாற முடிந்தது.

ஆனாலும், இன்று வரை பெரிய தயாரிப்பாளர்களும், சிறிய தயாரிப்பாளர் களுக்கும் ஒரு பெரிய இடைவெளி உள்ளது. பட்ஜெட் காரணமாக சிறிய தயாரிப்பாளர்களால் பிரம்மாண்டமான காட்சிகளை யோசிக்கவே முடியாது. ஆனால் ஏ.ஐ வந்திருப்பதால் கனவிலும் நினைத்துப் பார்த்திராத பிரம்மாண்டமான காட்சிகளை ஒரு கம்ப்யூட்டரில் உருவாக்க முடிகிறது. அந்த வகையில் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையே ஒரு சமநிலை உருவாகியிருக்கிறது. எதை வேண்டுமானாலும் கற்பனை செய்து, யார் வேண்டுமானாலும் படம் செய்யலாம் என்ற ஜனநாயகத் தன்மை உருவாகியிருக்கிறது. இதை ஏ.ஐ சாத்தியமாக்கிருக்கிறது. இதைத் தான் கமல் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும், படத்தை ரிலீஸ் செய்வதும், இரசிகர்களை தியேட்டருக்கு அழைத்துவருவதும் இன்னமும் சவாலாகத்தான் இருக்கிறது. இதற்கும் ஏ.ஐ பயன்படுத்தி வழி கண்டுபிடிக்க வேண்டும். நான் அதற்காகத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீங்களும் யோசிக்கலாம்.

-ஐ.எஸ்.ஆர்.செல்வகுமார்




# தமிழ் திரை உலகின் முதல் நகைச்சுவை வில்லன் டி.எஸ்.பாலையா

**மே மாத இதழின் தொடர்ச்சி**

ஒரு சமயம் கொல்கத்தாவில் படப்பிடிப்பு. எம்.ஜி.ஆருக்கு ஒரு வேஷம் கொடுக்கப்பட்டது. பாலையாவுக்கு கேரக்டர் ஏதுமில்லை. வேறுவிஷயமாக வந்தவர், படப் பிடிப்புத் தளத்துக்கு வந்தார். அந்த இயக்குநர் சட்டென்று எம்.ஜி.ஆருக்கு கொடுத்த வேடத்தை, பாலையாவுக்குக் கொடுத்துவிட்டார். அன்றைக்கு எம்.ஜி.ஆர். முகம் சுருங்கித்தான் போனது. ஆனால், பின்னாளில் எம்.ஜி.ஆர். இதுபற்றிச் சொன்ன போது... "அந்தக் கேரக்டரை பாலையா செய்திருந்தார். பாலையா செய்தது போல், என்னால் அந்த அளவுக்கு அந்தக் கேரக்டரைப் பண்ணியிருக்க முடியாது" என்று மனம் திறந்து சொன்னார். அத்தனை மகத்தான கலைஞனாக அப்போதே பரிணமித்தார் பாலையா.

திரை துறையில் மகா நடிகனாக கோலோச்சி இருந்த பாலையா ஒரு கட்டத்தில் எல்லாவற்றையும் வெறுத்து சன்னியாசி ஆகி பாண்டிச்சேரி அருகில் ஒரு ஊரில் சில காலம் வாழ்ந்து வர, எதேச்சியாக அந்த ஊருக்கு சினிமா வேலை காரணமாக வந்த மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம் அவர்கள் பாலையா அவர்களை அடையாளம் கண்டு அவரது மனதை மாற்றி மீண்டும் நடிப்புலகத்திற்கு அழைத்து வந்தார். அந்த வருடம் மாடர்ன் தியேட்டர் தயாரித்த பர்மா ராணி திரைப்படத்தில் வில்லன் வேடத்தில் இருந்து குணச்சித்திர வேடத்தில் நடித்தார். 1946 ஆம் ஆண்டு சித்ரா என்ற திரைப் படத்தில் நடித்தார். இந்த படம் பாலையாவினை கதாநாயகன் அந்தஸ்துக்கு உயர்த்திய படம். செண்பகவல்லி, வெறும் பேச்சல்ல, வால்மீகி போன்ற திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்தார்.



இந்நிலையில் 1949 இல் அண்ணா அவர்களின் கதை வசனத்தில் உருவான வேலைக்காரி திரைப் படத்தில் மணி என்ற கதாபாத்திரத்தில் பாலையா வில்லத்தனத்தின் உச்சம் தொட்டிருந்தார். கவுண்ட் ஆப் மாண்டி கிறிஸ்டோ ஆங்கிலப் படத்தில் வரும் மாண்டி கிறிஸ்டோ பாத்திரம் போல தமிழ்ப் படத்திலும் கொண்டுவரவேண்டுமென்ற தனது விருப்பம் வேலைக்காரியின் மூலம் நிறைவேற்றியதாக பாலையா ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். வேதாச்சல முதலியாரைப் பழி வாங்க நினைக்கும் ஆனந்தனின் நண்பன் மணியாக வரும் பாலையாவின் சதித்திட்டங்கள் கொடூரமானவை. திரைப்படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்த பெண்கள் "பாவி படுபாவி" என மணியைத் திட்டிக் கொண்டே போனார்கள். வில்லன் என்றால் பாலையா என்பது தமிழகத்தில் வலுவாக நிலை பெற்றுவிட்டது. பிறகு என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் இயக்கத்தில் நாட்டிய பேரொளி பத்மினி அறிமுகமான மணமகள் திரைப்படத்தில் பாலையாவின் நடிப்பு வெகுவாக பாராட்டப்பட்டது. இந்த படத்தில் பாலையா தான் சகலமும், பெண்களின் நெஞ்சத்தை கவர்வதில் தனித்துவ நடிப்பை கொட்டியிருந்தார். இந்தப் படத்தில் சிறப்பாக நடித்ததற் காக என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் பாலையா அவர்களுக்கு ஓர் காரினை பரிசாக அளித்தார். பிரபல மான பேசும் படம் இதழ், கௌரவ பட்டிய லில் 1950 இல் பாலையாவின் அந்த ஆண்டின் சிறந்த வில்லன் நடிகர் என்ற விருது வழங்கி கௌரவித்தது. சில படங்களில் எம்.ஜி.ஆருக்கு வில்லனாக நடித்தார்.

'மதுரை வீரன்' படத்தில் வில்லன் இவர்தான். "நாங்கள் அவனை பின் தொடர்ந்து சென்றோம், அவன் எங்களை முன் தொடர்ந்து சென்று விட்டான்" போன்ற வசனங்கள் மக்களிடையே மிகப்பெரும் வரவேற்பு பெற்றன. ஜெமினியின் 'மாமன் மகள்' படத்தில் இவர் வரும் இடங் களெல்லாம் தெறித்துச் சிரித்தார்கள். காமெடியும் வில்லத்தனமும் கலந்த கதாபாத்திரம், அன்றைக்கு இவருக்கு மட்டுமல்ல சினிமாவுக்கே புதுசு. இவ் வாறாக கதாநாயகன், வில்லன், குணச்சித்திரம் போன்ற கதாபாத்திரங்களில் நடித்து மக்களிடம் வரவேற்பை பெற்ற பாலையா அவர்கள் தூக்கு தூக்கி படத்தின் மூலம் முழு நகைச்சுவை பாத்திரத்தை ஏற்றிருந்தார்.

பாலையாவின் நகைச்சுவை நடிப்பு காதலிக்க நேரமில்லை (1964) படத்தில் உச்சத்தைத் தொட்டது. சின்னமலை எஸ்டேட் உரிமையாளரான பாலையாவின் நிலக்கிழாருக்கே உரித்தான திமிரான இயல்பு. பேச்சு இன்றளவும் ரசிக்கக்கூடியதாக உள்ளது. கதைச்சூழலுக்கேற்ப வேறுபட்ட முக பாவங்களுடன் ஏற்ற இறக்கமான குரலில் பாலையா நடிக்கும்போது பார்வையாளர்களால் சிரிக்காமல் இருக்க முடியாது. குறிப்பாக நாகேஷ் சொல்லும் மர்மக் கதையும் அதைக் கேட்ட பாலையா அடைந்த பயத்தினை வெளிப்படுத்தும் முகபாவமும் இன்றளவும் ரசிக்கலாம். 'காதலிக்க நேரமில்லை' படத்தை ரீமேக் செய்ய முடிவு செய்து, இயக்குநர் ஸ்ரீதரிடம் சென்றார் நடிகர், இயக்குநர் மனோபாலா. ஹீரோவா யாரைப் போடப் போறீங்க?' என்று ஸ்ரீதர் கேட்டார். 'ரவிச்சந்திரன் கேரக்டருக்கு அந்த நடிகரைப் போடலாம்னு இருக்கேன்' என்றார். 'ஹீரோ கேரக்டருக்கு யாரைப் போடப் போறீங்க?'ன்னு கேட்டேன் என்றார் ஸ்ரீதர். 'முத்துராமன் கேரக்டருக்கா? அதுக்கு இந்த நடிகரைப் போடலாம்னு ஐடியா' என்றார். 'படத்துல ஹீரோ கேரக்டரை யார் செய்யப் போறாங்க?' என்று கேட்டதும் 'ஓ... நாகேஷ் கேரக்டருக்குத்தானே சார். அந்த நடிகர்தான்' என்று சொன்னார். 'படத்துல ஹீரோ பாலையாதான். அவர் நடிச்ச கேரக்டருக்கு யாரைப் போடப்போறீங்க? அவருக்கு பதிலா அந்த கேரக்டரைப் பண்றதுக்கு யாராவது இருக்காங்களா?' என்று ஸ்ரீதர் கேட்க, அந்த இயக்குநர் காதலிக்க நேரமில்லை திரைப்படத்தை ரீமேக் செய்யும் எண்ணத்தை அன்றே விட்டுவிட்டார். படத்தின் டைட்டில் கார்டில் டி.எஸ்.பாலையா அவர்கள் பெயரே முதலில் வரும். மீள் உருவாக்கம் செய்ய முடியாத, செய்யக்கூடாத ஒரு சில திரைப்படங்களில் காதலிக்க நேரமில்லை திரைப்படமும் ஒன்று. 'ஊட்டி வரை உறவு' திரைப்படத்தில் பயந்த சுபாவமுள்ள பணக்காரர் வேடத்தில் வந்த பாலை யாவின் அஞ்சித் தவிக்கும் நடிப்பு நகைச்சுவை யோடு அற்புதமாக வெளிப்பட்டது. கர்வம், ஆணவம், செருக்கு, இறுமாப்பு, அலட்டல் ஆகியவற்றையெல்லாம் ஒருங்கே கொண்டு வந்த 'திருவிளையாடல்' ஹேமநாத பாகவதர், பாலையா எடுத்த புது ஸ்டைல் அவதாரம். பாலசந்தரின் 'பாமா விஜயம்' படத்தில் மூன்று மகன்களையும் மருமகள்களையும் கவனிக்கிற, கவனித்துப் பொருமுகிற, கிண்டலடிக்கிற கேரக்டரை ரொம்ப அசால்ட்டாகச் செய்திருப்பார். பாலும் பழமும், பாகப்பிரிவினை, பாவ மன்னிப்பு போன்ற படங்களில் பாலையாவின் குணச்சித்திர நடிப்பு உச்சத்தை தொட்டது. தமிழ் திரையுலகம் மட்டுமல்லாமல், மலையாளத்தில் ப்ரசன்னா, சந்திரிகா, ஆசாதீபம் ஆகிய திரைப்படங்களிலும், கன்னடத்தில் குணசாகரி என்ற திரைப்படத்திலும் நடித்திருந்தார். 1972 ஆம் ஆண்டு வெளியான எல்லைக்கோடு திரைப் படம் பாலையா அவர்களின் இறுதி திரைப்படமாக அமைந்தது.

1940 ஆம் வருடம் பத்மாவதி என்பவரையும், அடுத்த வருடமே அவரது தங்கை லீலாவதியையும் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சாய்பாபா, துர்காலட்சுமி, சோனையன், தேவ சேனாதிபதி, அரவிந்தோ, அம்புஜம், ரகு ஆகிய பிள்ளைகள் உண்டு. பின்னாளில் நடிகை சந்திரகாந்தாவின் அக்கா நவநீதம் என்பவரையும் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு மனோ சித்ரா என்ற மகளும் உண்டு. மேலும் மலையாளம், தெலுங்கு திரைப்படங்களிலும் நடித்தார். சாய்பாபா பின்னணிப் பாடகராக எம்.எஸ்.விஸ்வநாதன் குழுவில் இடம் பெற்றிருந்தார். இவ்வாறாக திரை துறையிலும் சொந்த வாழ்விலும் முழுமையாக வாழ்ந்த பாலையா என்னும் மகா கலைஞன் 1972ம் ஆண்டு ஜூலை மாதம் 22ம் தேதி காலமானார்.

பாலையாவின் திறமையினை பாராட்டிய அமெரிக்க இயக்குநர் எல்லீஸ் ஆர்.டங்கன், அவரை ஹாலிவுட்டில் அறிமுகம் செய்ய விரும்பி மேற்கத்திய திரைப்படங்களில் நடிக்க அழைத்த போது பாலையா அவர்கள் அந்த வாய்ப்பினை நிராகரித்தார். டங்கன் அவர்கள் பாலையா அவர்களைப் பற்றி கூறும்பொழுது "No one can replace Balaiah" என்பார். இதையே திருவிளையாடல் படத்தில் "ஒரு நாள் போதுமா" என்ற பாடல் வரிகளில் பாடலில் வரும் சில வரிகள் ஹேமநாத பாகவதருக்கு பொருந்தியது போலவே பாலையா அவர்களுக்கும் பொருந்தியது.

"அழியாத கலை என்று என்னை பாடுவார்

என்னை அறியாமல் எதிர்ப்போர்கள் எழுந்தோடுவார்.....

எனக்கு இணையாக தர்பாரில் எவரும் உண்டோ".

அன்பன் கார்த்திகேயன்
எழுத்தாளர்

# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-8

**V.V.பிரசாத்**
(தீ சினிமா ரிசோர்ஸ் சென்டரின் ஆவனக்காப்பாளர்)

(தீ சினிமா ரிசோர்ஸ் சென்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைப்பொருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)



## R.பத்மநாபன்

R. பத்மநாபன் என அறியப்படும் ரங்கசாமி பத்மநாபன் தமிழ் சினிமாவில் தனக்கென முத்திரை பதித்த ஜாம்பவான்களில் ஒருவர் என்றாலும் ஒரு சில பழமைவாதிகள் மற்றும் தமிழ்த்திரைப்பட ஆர்வளர்களால் மட்டுமே பேசப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

பத்மநாபன் 1895ம் ஆண்டு சிவகங்கையில் ஒரு நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த குடும்பத்தில் பிறந்தார். இலங்கையில் ஒரு ஆங்கில விநியோகஸ்தருக்காக காட்சியகங்கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டப் பொழுது சினிமா மீதான ஆர்வம் அவருக்கு அதிகரித்தது. பின்னாளில் சென்னை வந்தவுடன் ஓரியண்டல் பிலிம் சர்வீஸஸ் என்ற சொந்த நிறுவனத்தை ஆரம்பித்தார். இதில் முக்கியமான வேலை ஹாலிவுட் அல்லது மும்பை படங்களை கொண்டு வருவது, படப்பிடிப்புக்கு தேவையான பொருட்களை வழுங்குவது மற்றும் படம் தயாரிக்கும் வேலைகளில் உதவி செய்வதாக இருந்தது.

பிறகு, தமிழ்த்திரைப்பட ஜாம்பவான் K.சுப்ரமணியத்தின் மாமனார் K.S.வெங்கட்ரமணி உதவியுடன் சென்னையை சேர்ந்த அஸோஸியேட்டட் பிலிம் ஸ்டுடியோஸ் தொடங்கினார். இது ஜெனரல் பிக்சர்ஸ்க்கு பிறகு, தென்னிந்தியாவின் இரண்டாவது பெரிய தயாரிப்பு ஸ்டுடியோவாக விளங்கியது.

பத்மநாபன் பேசாப்பட காலங்களில் தனக்கென்று ஒரு முக்கியாயமான இடத்தை பிடித்திருந்தார். வக்கீலாக இருந்து பின்னர் திரை இயக்குநர்/ தயாரிப்பாளர் ஆன K.சுப்ரமணியம் திரை வாழ்க்கையை ஆரம்பித்து வைத்தது பத்மநாபன் தான். சுப்ரமணியம் பத்மநாபனுக்கு திரைக்கதை எழுதி வந்தார். பின்னாளில் புரட்சிகரமான சேவசதானம் மற்றும் தியாகபூமி போன்ற படங்களை இயக்கினார்.




பல புதுமைகள் கொண்டு வந்த இயக்குனர் ராஜா சாண்டோவை 1929ம் ஆண்டு வந்த பேசாப்படமான அநாதை பெண் மூலமாக அறிமுகப் படித்தியதும் பத்மநாபன் தான். இப்படத்தின் மூலம் பத்மநாபனுடைய சொந்த நிறுவனமான அஸோஸியேட்டட் பிலிம் ஸ்டுடியோஸ் துவங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக இப்படத்தின் பிரதி இப்பொழுது




எங்கும் இல்லை. தொடர்ந்து ராஜா சாண்டோ பத்மநாபனுக்கு பணிபுரிந்தார். பல பேசாப் படங்கள் தயாரிக்கப்பட்டன. K. சுப்ரமணியம் இப்படங்கள் மூலம் நன்கு பயிற்சிப் பெற்றார்.

1931ல் தமிழ் படங்கள் பேச தொடங்கியபோது பத்மநாபன் பல பேசாப் படங்கள் எடுத்த பிறகு தமிழ் மற்றும் தெலுங்கில் பேசும் படங்கள் எடுக்க ஆரம்பித்தார். ராமலிங்க முதலியாருடன் இணைந்து ஓரியண்டல் பிலிம் சர்வீஸஸ் என்ற தயாரிப்பு நிறுவனம் தொடங்கினார். அவருடைய படங்கள் பெரும்பாலும் கொல்கத்தாவில் உள்ள பயனீர் ஸ்டுடியோஸில் படமாக்கப்பட்டன. அவர் இயக்கத்தில் வந்த முதல் பேசும் படம் 1934ம் ஆண்டு வந்த திரௌபதி வஸ்திரபுரானம் ஆகும். சேலத்தைச் சேர்ந்த ஏஞ்சல் பிலிம்ஸ் கொல்கத்தாவில் இப்படத்தை தயாரித்தது.

திரௌபதி வஸ்திரபுரானத்தை தொடர்ந்து 1935ல் பத்மநாபன் இயக்கத்தில் மேலும் இரண்டு படங்களான நல்லதங்காள் மற்றும் மாயா பஜார் (அல்லது வத்சலா கல்யாணம்) வெளி வந்தது.

நல்லதங்காள் ஹிந்து புராணத்தில் வந்த தன் 7 குழந்தைகளுடன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்ட ஒரு தாயின் கதை ஆகும். வறட்சி, வறண்ட நிலம் மற்றும் சமூகத்தின் கொடுமைகள் போன்ற காரணத்தால் தற்கொலை செய்துகொள்கிறாள். இதை அறிந்த அவளுடைய சகோதரனும் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்து கொள்கிறான். அவளின் இறப்பிற்கு பிறகு கிராமத்தில் கடவுளாக கும்பிடபடுகிறாள். அவளுக்கு கோவில்களும் கட்டப்படுகின்றன. இதே பெயரில் இதே வருடத்தில் இந்த கதையை ஏஞ்சேல் பிலிம்ஸுக்காக P.V. ராவ் இயக்கியிருந்தார். இந்த கதையை தழுவி பல படங்கள் பின் நாட்களில் வந்திருந்தாலும் இவ்விரு படங்கள் தான் முதலில் எடுக்கப்பட்டதாகும்.

படத்தின் தலைப்பு கதாபாத்திரத்தில் P.S.ரத்தனாபாய் நடிக்க P.S. சரஸ்வதிபாய், M.R. கிருஷ்ணமூர்த்தி, M.S.முருகேசன் மற்ற முக்கிய வேடங்களில் நடித்திருந்தனர்.

நிஜ வாழ்க்கையில் சகோதரிகளான ரத்தனாபாய் மற்றும் சரஸ்வதிபாய் படங்களில் சேர்ந்தே நடித்து வந்தனர். பாளையங்கோட்டை சகோதரிகள் என்று அழைக்கப்பட்ட இவர்கள் 45 நாள் படப்பிடிப்பிற்கு ரூ.25000 வாங்கிவந்தார்கள். 45 நாட்களுக்கு மேல் படப்பிடிப்பிற்கு அழைத்தால் கூடுதல் பணம் வசூலிப்பார்கள் என பிரபல திரை வரலாறு ஆர்வலர் ராண்டார் கய் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

R. பத்மநாபனின் சேது பந்தனம் அவர் இயக்கிய வெற்றி படங்களில் வரிசையில் முதன்மையான இடம் வகிக்கிறது. இப்படம் ராமாயண புராணத்தில் ராவணனின் பிடியில் இருக்கும் தனது மனைவி சீதையை மீட்க ராமர் தனது பக்தன் ஹனுமான் மற்றும் அவனது நண்பர்களான வானரப்படை உதவியுடன் இலங்கைக்கு பாலம் கட்டும் கட்டத்தை தழுவி எடுக்கப்பட்டதாகும். இப்பாலதிற்கு சேது பந்தனம் என்று பெயர்.

பிரபல நட்சத்திர நடிகர் P.B. ரங்காச்சாரி ராவணன் கதாபாத்திரத்தில் நடிக்க, நாட் அண்ணாஜி ராவ் ராமனாக மற்றும் M.S. மோகனாம்பாள் மண்டோதரியாகவும் நடித்திருந்தனர். இவர்களுடன்சீதையாக T.K.கண்ணம்மாள் நடித்தார். பலரால் பாராட்டப்பட்ட ஹனுமான் கதாபாத் திரத்தில் M.D.பார்த்தசாரதி நடித்திருந் தார். பின்னாளில் பிரபல கர்நாடக இசையின் ஜாம்பவான் ஆனார். ஹனுமானாக அவரின் நடிப்பு படத்தின் மிக பெரிய வெற்றிக்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. பத்மநாபன் 1946ம் ஆண்டு தெலுங்கில் இப்படத்தை எடுத்தார். அந்த படமும் வியாபாரரீதியாக மிக பெரிய லாபம் அடைந்தது.

தொடரும்...



THIRAI MOZHI TAMIL MONTHLY REGISTRAR OF NEWSPAPER FOR INDIA R.Dis No:579/2023
**RNI No: TNTAM/2023/88599** Published on 2nd WEEK OF EVERY MONTH
June - 2025



## உலக சமுதாய சேவா சங்கம் தயாரிக்கும் "ஆனந்த வாழ்க்கை"

> பக்கம் 1 தொடர்ச்சி



**வென்றவர். இவர் தற்பொழுது தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக உள்ளார்.**

பல்வேறு வெற்றி படங்களுக்கு இசையமைத்த சத்யா.C. இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார். ஒளிப்பதிவு K.கோகுல், எடிட்டிங் சிவராஜ், புரோடக்ஷன் மேனேஜர் M. உதயகுமார், ஒலிப்பதிவு A.கஜபதி, DI.கார்த்தி, இணை இயக்கம் ராமு மா.சே. ஒருங்கிணைப்பு குரு அரங்கதுரை, துணை இயக்குனர்கள் தங்கமித்ரன், முத்துகிருஷ்ணன், மூர்த்தி நடராஜன், மக்கள் தொடர்பு ஜான்சன், டிசைன் NV.அகிலன் போன்ற தொழில்நுட்ப கலைஞர்கள் பணியாற்றி உள்ளனர்.

இந்த திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகத்தை ஆழியாறு அருள்நிதி. CEO.திரு.P. முருகானந்தம் கவனிக்கிறார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் ஆசியோடு, தலைவர், பத்மஸ்ரீ. திரு. SKM.மயிலானந்தன் அவர்களின் வழிகாட்டுதலின்படி இத்திரைப்படத்தை ஆழியாறு அறிவுத் திருக்கோயில் உடன் இணைந்து உலக சமுதாய சேவா சங்கம் பெருமையுடன் தயாரித்திருக்கிறது.



இந்த உலக சமுதாய சேவா சங்கத்தின் பயிற்சி தலைமையகமாக ஆழியார் அறிவுத்திருக்கோயில் செயல்பட்டு வருகிறது.

உலகம் முழுவதிலுமிருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகைப் புரிந்து தங்கி மனவளக்கலை பயிற்சி எடுத்து செல்கின்றனர். கோவை மாவட்டத்தின் ஆணைமலை வட்டத்தில் உள்ள ஆழியார் அணைக்கு அருகில் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் இயற்கைச் சூழலில் அறிவுத் திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

உலக சமுதாய சேவா சங்கம் 1958ஆம் ஆண்டு வேதாத்திரி மகரிஷி அவர்களால் உருவாக்கப்பட்டது.

தனிமனித அமைதி மூலம் உலக அமைதி என்பதை நோக்கமாக கொண்ட WCSC உலக சமுதாய சேவா சங்கம் இலாப நோக்கமற்ற சேவை அமைப்பாகும். சாதி, மதம், இனம், மொழி கடந்து, உடல்நலம், மனவளம், உயிர்வளம், குடும்பநலம் மற்றும் சமுதாய நலத்திற்கான மனவளக்கலை யோகா பயிற்சிகளை எளியமுறை வாழ்க்கைக்கல்வியாக பயிற்றுவிக்கிறது.

உலகம் முழுவதும் 2500 இடங்களில் 2500 பயிற்சி மையங்கள், 400க்கும் மேற்பட்ட அறக்கட்டளைகளைகள், 200க்கும் மேற்பட்ட அறிவுத்திருக்கோயில்கள் 370 வேதாத்திரிய கிராமங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. 30க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களுடன் இணைந்து யோகமும் மனித மாண்பும் கல்வி சான்றிதழ், பட்டயம் மற்றும் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்ட படிப்புகளை வழங்குகிறது.

**"10 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர் களுக்கு பண்பாட்டு கல்வியாக மனவளக்கலை பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது"**

யோகமும் இளைஞர் வல்லமையும் என்ற பாடதிட்டத்தின்கீழ் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பண்பாட்டு கல்வியாக மனவளக்கலை பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

25 இலட்சம் குடும்பத்திற்கு மேல் மனவளக்கலை யோகா பயிற்சியினால் பயனடைந்துள்ளார்கள். தினமும் பல்லாயிரம் பேர் பயின்றும் வருகிறார்கள்.

**திரை மொழி**

| | |
|---|---|
| நிறுவனர்/ஆசிரியர் | : R. சுப்ரமணிய பாரதி |
| பொறுப்பு ஆசிரியர் | : N. மூர்த்தி |
| சிறப்பாசிரியர் | : M. வேடியப்பன், |
| கௌரவ ஆசிரியர்கள் | : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார் |
| உதவி ஆசிரியர்கள் | : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார் |
| தலைமை நிருபர் | : பாலமுரளிவர்மன் |
| நிருபர் | : தங்கமித்ரன் |

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766



Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**